Alcohol and Drug
Information Centre

ADIC

No.40/18, Park Road, Colombo 05, Sri Lanka.
Tel: +94 11 2584416,+94 11 2592515, Fax: +94 112508484
Email: info@adicsrilanka.org
Web site: http//www.adicsrilanka.org

16.03.2023.

**மதுசார நிறுவனங்களின் தேவைகளை அமுல்படுத்துவது மதுவரித் திணைக்களத்தின் கடமையா?**

மதுவரியை (கலால்)) அரசின் வருவாயாகக் கருதுவது காலாவதியான பொருளாதாரத் திட்டமாகும், மதுவரியில் இருந்து பெறப்படும் பணத்தொகையை அரசாங்கத்திற்குக் கிடைக்கப்பெறும் வருவாயாகக் கருத முடியாது. மதுசார பாவனையால் அவர்களின் உடல் நலம், பொருளாதாரம் மற்றும் பிற செலவுகளுக்கு அரசாங்கம் ஒதுக்க வேண்டிய பணத்தொகைக்கும், மேற்குறிப்பிட்ட மதுசாரத்திலிருந்து கிடைக்கப் பெரும் கலால் வரித்தொகைக்கும் இடையே உள்ள இடைவெளியைக் கணக்கிட்டுப்பபார்த்து, கலால் தொகையானது வருமானமாக உள்ளதா அல்லது இது அரசாங்கத்திற்கு நட்டமானதா என்பதை அறிவியல் பூர்வமாக தீர்மானிக்க வேண்டும். இலங்கையில் உலக சுகாதார ஸ்தாபனம் (WHO), மதுசாரம் மற்றும் புகையிலை மீதான தேசிய அதிகாரசபை (NATA) மற்றும் சுகாதார அமைச்சு ஆகியன இணைந்து நடத்திய ஆய்வில் 2015 ஆம் ஆண்டு கலால் வரி மூலம் பெறப்பட்ட தொகை ரூபா 105,234.00 மில்லியன் எனவும் அதே ஆண்டில் அரசாங்கத்திற்கு மதுசார பாவனையினால் ஏற்பட்ட பொருளாதார மற்றும் சுகாதாரப் பாதிப்புகளுக்கு அரசாங்கம் செலவழித்த தொகையானது 119,669.00 மில்லியன்களாகும். இதில் இருந்து தெரியவருவதாவது கலால் வரியிலிருந்து பெறப்படும் தொகையைப் பற்றி மட்டும் சிந்திப்பதானது, மிகக் குறுகிய பொருளாதார வளர்ச்சிக் கண்ணோட்டம் என்பதும், மதுசார பாவனையினால் ஏற்படும் இழப்பைக் கணக்கிடுவது பொருளாதார வளர்ச்சிக்கு மிகவும் பயனுள்ள பார்வை என்பதாகும். இந்த முறையானது தற்போது வளர்ச்சியடைந்த நாடுகளில் பயன்படுத்தப்பட்டு வருவதால், சரியான வரி முறைகளை அறிமுகப்படுத்தி நாட்டின் மதுசார பாவனையை குறைப்பதே அவர்கள் பின்பற்றிவரும் முறையாகும்.

உலகில் ஒவ்வொரு 10 வினாடிக்கும் ஒருவர் மதுசார பாவனையினால் மரணிக்கின்றனர். மேலும் இலங்கையில் தினமும் மதுசார பாவனையினால் சுமார் 50 பேர் அகால மரணம் அடைகின்றனர். தற்போது மதுசார பாவனையாளர்களின் பாவிக்கும் அளவினைக் குறைப்பதற்கும் புதிதாக மதுசார பாவனைக்குப் பழகுவதனைக் குறைப்பதற்கும் மதுசார வரியை அதிகரிப்பதானது மிகவும் பயனுள்ள முறையாகும் என உலக சுகாதரஸ்தாபனம் உட்பட இது தொடர்பில் ஆய்வுகளை மேற்கொண்ட துறைசார்ந்த நிறுவனங்கள் விஞ்ஞான ரீதியாக நிருபித்துள்ளன. மேலும் உலக சுகாதாரஸ்தாபனம் மதுசார பாளைனையைக் கட்டுப்படுத்துவதற்காக நாடுகளுக்கு பரிந்துரைத்துள்ள விடையங்களில், வரி அதிகரிப்பானது மிகுவும் பயன் கூடிய வழிமுறை என தெரிவித்துள்ளது.

மேலும் 2022ல் மதுசாரத்திற்கான உற்பத்தி செலவு அதிகமென இரண்டு தடவைகளில் விலையை அதிகரித்திருந்தாலும் அரசாங்கம் அதற்கான வரியை அதிகரிக்காததனால் அரசாங்கத்திற்குக் கிடைக்கக் கூடிய வரிவருமானம் இழக்கப்பட்டது.

கடந்த வரவு செலவுத் திட்ட முன்மொழிவுகளின் மூலம் மதுசாரத்தின் மீதான கலால் வரியை 20மூ த்தினால் அதிகரிக்க அரசாங்கம் முடிவு செய்துள்ளது. இந்த வரி விதிப்பின் மூலம், அரசின் வருவாயை அதிகரிக்கவும், மதுசார பாவனையின் அளவைக் குறைக்கவும் அரசு நம்புவதாகத் தெரிகிறது.

இவ்வாறான சூழ்நிலையில் மதுசார நிறுவனங்களின் விற்பனை குறைவடைந்துள்ளதாக கலால் திணைக்களம், கலால் வரியை குறைக்க முன்வந்துள்ளதை ஊடகங்கள் மூலம் காணும் போது ஆச்சரியமாக உள்ளது. இதன் மூலம் மதுசார நிறுவனங்களுக்கு ஏற்பட்ட நட்டம், சட்டவிரோத மதுசார பாவனை அதிகரிப்பு என்பன கலால் திணைக்களம் கூறும் காரணங்களாகும்.

கலால் துறையின் முயற்சிகள்,

1. மதுசார நிறுவனங்களின் இலாபத்தை அதிகரிப்பது

2. சட்டவிரோத மதுசாரத் தொழிலைக் கட்டுப்படுத்த சட்டப்பூர்வ மதுசாரத்தின் விலையைக் குறைத்தல்

மேற்கூறிய இரண்டு விடயங்களும் கலால் திணைக்களத்தின் பொறுப்பல்ல, மாறாக அவர்கள் கலால் வரி வருவாயை அதிகரிப்பது மற்றும் சட்டவிரோத மதுசார தொழிலைக் கட்டுப்படுத்தவும் காவல்துறையுடன் இணைந்து செயல்பட வேண்டும்.

மேலும் மத்திய வங்கியின் அறிக்கைகளின்படி, கலால் வருவாயை நாட்டின் மிகப்பெரிய வரி வருவாயாக முன்னிலைப்படுத்த முயற்சித்த போதிலும், நாட்டில் மொத்த வரி வருமானத்தில் 11% மட்டுமே மதுசார வரியாகக் கிடைக்கின்றது. அதை வருமானமாகவும் கருத முடியாது. காரணம் நாம் மேலே குறிப்பிட்ட, இலங்கையில் மதுசார வருமானம் மற்றும் செலவீனங்கள் தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட ஆய்வில், மதுசார வரி நாளாந்த வருமானம் 288.31 மில்லியன் ரூபாவாக இருக்கும் போது, 2015 இல் மதுசார பாவனையால் ஏற்பட்ட பொருளாதார நட்டம் நாளொன்றுக்கு 327.86 மில்லியன் ரூபாவாகும்.

மதுசாரத்தைக் கட்டுப்படுத்துவதற்கான நடவடிக்கைகள் ஒரு நாட்டிற்கு எப்போதும் நன்மை பயக்கும், அதேவேளை இது உற்பத்தி நிறுவனங்களுக்கு பாதிப்பாக அமையும். அரசாங்க அதிகாரிகளின் செயற்பாடுகள் அரசாங்க கொள்கைகளை நடைமுறைப்படுத்துவதாக இருக்க வேண்டுமே தவிர மதுசார நிறுவனங்களின் தேவைகளை பூர்த்தி செய்வதாக இருக்கக்கூடாது என மதுசாரம் மற்றும் போதைப்பொருள் தகவல் நிலையம் வலியுறுத்தியுள்ளது.

**மதுசாரம் மற்றும் போதைப் பொருள் தகவல் நிலையம்**